ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1901/20 - 2015 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2015.02.13

*1901/20 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பொலிஸ் கட்டளைச் சட்டம்

பொலிஸ் கட்டளைச் சட்டம் (53 ஆம் அத்தியாயம்) பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 55 ஆம் உறுப்புரையின் கீழ் அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் பொலிஸ் மா அதிபரினால் நிர்மாணிக்கப்பட்ட இலங்கை பொலிஸ் நிலையத்தில் பாரிய அளவிலான நிதி மோசடிகளை விசாரிப்பதற்காக தாபிக்கப்படுகின்ற புதிய பொலிஸ் பிரிவை அமைப்பது தொடர்பான அறிவித்தல்.

பொலிஸ் மா அதிபர்.

கொழும்பு,
*2015,* பெப்புருவரி *13.*

**இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் புதிய பொலிஸ் பிரிவொன்றை தாபித்தல்**

*1. 2015.01.21* மற்றும் *2015.02.12* ஆந் திகதிகளில் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய பொதுமக்களின் சமாதானம் குறித்து பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துக்கேற்ப பாரிய அளவிலான நிதி மோசடிகளை விசாரிப்பதற்காக தனியே ஒரு பொலிஸ் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளமையை வெளியிடுவது தொடர்பான அறிவித்தல் இத்தால் பிரசுரிக்கப்படுகிறது.

*2.* "மோசடி மற்றும் ஊழல் குறித்த பிரிவொன்றை தாபித்தல்" எனும் தலைப்பில் கௌரவ அமைச்சரினால் *2015.12.21* ஆந் திகதியன்று முன்வைக்கப்பட்ட அமைச்சரவை சுற்றுநிருபத்திற்கு அமைய இலங்கையின் எந்த பிரதேசத்திலேனும் இடம்பெற்றுள்ள பின்வரும் மோசடிகளை இவ்விசாரணைப் பிரிவின் ஊடாக விசாரித்தல் வேண்டும்.

(i) பாரிய அளவிலான நிதி மோசடிகள், ஊழல் மற்றும் பாரிய அளவிலான அங்கீகரிக்கப்படாத கருத்திட்டங்கள் ;
(ii) பாரிய அளவிலான பொதுமக்கள் பணம் மற்றும் சொத்துக்களுக்கு எதிரான குற்றங்கள்;
(iii) தேசிய பாதுகாப்பு, அரச நிதி, சுகாதாரத்திற்கும் சுற்றாடலுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரிய அளவிலான நிதி மோசடிகள் ;
(iv) சட்டவிரோதமான வகையில் செல்வந்தராதல் மற்றும் உத்தியோகபூர்வ அதிகாரத்தை வரையறையின்றி பயன்படுத்தல்;
(v) பண சுத்திகரிப்பு, பயங்கரவாதிகளுக்கு பணம் வழங்குதல் மற்றும் சட்ட விரோதமான கொடுக்கல் வாங்கல்களை புலனாய்வு செய்தல்.

*3.* இப்பிரிவானது, பொலிஸ் மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் பணிப்பாளரினால் செயற்படுவதோடு மேற்கண்ட குற்றங்களை புலனாய்வு செய்வதற்காக இலங்கை முழுவதும் அமைக்கப்பட்டுள்ள நியாயாதிக்கங்களில் புலனாய்வு செய்வதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

*4.* அமைச்சரவைத் தீர்மானத்துக்கமைய அமைக்கப்பட்டுள்ள பிரதமரின் தலைமையின் கீழான அமைச்சரவை உப குழுவினால் தாபிக்கப்பட்டுள்ள செயலகம் ஊடாக இம்முறைப்பாடுகளை விசாரிப்பதன் பொருட்டு பொலிஸ் மா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படும் அதேவேளை அதற்கு மேலதிகமாக விசேடமான முறைப்பாடுகள் அமைச்சரவை உப குழுவினால் நேரடியாக இப்பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படும்.

*2-788*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.